**அக்டோபர் – 04**

# TNPSC துளிகள்

- சென்னையில் உள்ள "இன்ஃபினிட்டி பூங்கா" என்று அழைக்கப்படும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கான சிறப்புப் பூங்காவைப் பராமரிப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியானது தமிழ்நாடு அரசிடமிருந்து பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுள்ளது.
    - இந்தப் பூங்காவானது பொலிவுறு நகரங்கள் என்ற திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- அக்டோபர் 2 ஆம் தேதியன்று முன்னாள் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் 113வது பிறந்த நாளை நினைவுகூறும் வகையில், அரசியல் ஆய்வாளரான சந்தீப் சாஸ்திரி என்பவர் "லால் பகதூர் சாஸ்திரி: அரசியல் மற்றும் அதற்கு அப்பால்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- முதன்முறையாக, இந்தியாவின் முதலாவது தனியார் ரயிலான லக்னோ - டெல்லி தேஜாஸ் விரைவு ரயிலின் பயணத்தின் போது ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் பயணிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
    - இந்த ரயில் பயணத்தின்போது ஒரு மணி நேரத்திற்கும் மேல் தாமதம் ஏற்பட்டால் ரூ 100 என்ற தொகையும் இரண்டு மணி நேரத்திற்கு மேல் தாமதம் ஏற்பட்டால் பயணிகளுக்கு இழப்பீடு ரூ 250 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்


## கிராமப்புற சுகாதாரத்திற்கான தூய்மை இந்தியா விருது – தமிழ்நாடு

- மத்திய அரசின் கிராமப்புறத் தூய்மைக் கணக்கெடுப்பிற்குப் பிறகு கிராமப்புற சுகாதாரத்தில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆய்வில் தமிழ்நாடு 11வது இடத்தில் இருந்தது. தற்பொழுது இந்தக் கணக்கெடுப்பில் இது முதலிடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும்.
- நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரான எஸ்.பி. வேலுமணி மாநில அரசின் சார்பாக பிரதமர் மோடியிடமிருந்து இந்த விருதைப் பெற்றார்.
- இந்த ஆண்டில் ஸ்வச்தா கணக்கெடுப்பானது நாடு முழுவதும் 17,200 கிராமங்களிலும் 690 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.
- மக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்கள், சுயாதீன மதிப்பீட்டாளர்களின் கண்காணிப்பு முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- தூய்மை இந்தியா திட்டத்தின் (Swachh Bharat Mission - SBM) வலைத் தளத்தின் படி, தமிழ்நாடானது 100 சதவிகிதம் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற (Open Defecation Free - ODF) மாநிலம் என்ற நிலையை அடைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் பிரதமர் மோடி தூய்மை இந்தியா என்ற திட்டத்தை அறிவித்ததை அடுத்து மாநிலத்தில் 53.46 லட்சத்துக்கும் மேற்பட்ட கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாக அந்த இணையதளத்தில் உள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தேசியச் செய்திகள்

## ஹைதராபாத் நிஜாமின் நிதி தொடர்பான வழக்கு

- 1948 ஆம் ஆண்டில் ஹைதராபாத்தின் ஏழாவது நிஜாம் ஒஸ்மான் அலிகான் என்பவரால் பிரிட்டனில் உள்ள பாகிஸ்தான் உயர் ஆணையருக்கு மாற்றப்பட்ட நிதி இந்தியாவுக்குச் சொந்தமானது என்று இங்கிலாந்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- பாகிஸ்தானில் சேருவதற்கான சாத்தியக் கூறுகளின் அனுமானத்தில், நிஜாம் 1948 ஆம் ஆண்டில் 1,007,940 பவுண்டுகள் மற்றும் ஒன்பது ஷில்லிங் ஆகியவற்றை பாகிஸ்தான் உயர் ஆணையருக்கு வழங்கினார்.




- சுதேச அரசாக இருந்த ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைத்த பின்னர், கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் இந்த நிதிக்கான உரிமையைக் கோரி வந்தன.
- ஏழாவது நிஜாமின் பேரன்களான முக்கரம் ஜா மற்றும் முஃபாக்கம் ஜா ஆகியோரும் இந்த நிதிக்கான உரிமையைக் கோரி வந்தனர்.
- 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று தங்களது தாத்தாவால் அமைக்கப்பட்ட அறக்கட்டளையினால் இந்த நிதி அவர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.
- அசல் தொகையானது தற்பொழுது 35 மில்லியன் பவுண்டாக (ரூ. 306 கோடி) அதிகரித்துள்ளது.
- பிரிட்டன் நீதிபதியான ஸ்மித் என்பவர் 35 மில்லியன் பவுண்ட் என்ற நிதியானது 7வது

நிஜாம், அவருடைய இளவரசர்கள் மற்றும் இந்தியா ஆகியோருக்கு சொந்தமானது என்று தீர்ப்பளித்துள்ளார்.

- இந்த வழக்கு "ஹைதராபாத் நிதி வழக்கு" என்று பிரபலமாக அறியப்படுகின்றது.

## பசிபிக் தீவுகளுக்கான கடனுதவி

- பசிபிக் தீவு நாடுகளின் குழுவிற்கு 150 மில்லியன் டாலர் கடனுதவி வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
- அந்த நாடுகளின் தேவைகளுக்கேற்ப சூரிய ஆற்றல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் காலநிலை தொடர்பானத் திட்டங்களை மேற்கொள்ள இந்த நிதியானது பயன்படுத்தப்படும்.
- ஐ.நா பொதுச் சபையின் 74வது அமர்வின்போது நடைபெற்ற இந்தியா-பசிபிக் தீவுகளில் உள்ள வளரும் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்தக் கடனுதவி குறித்து அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் மூலம் பயனடையும் பசிபிக் தீவுகளைச் சேர்ந்த நாடுகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| கிரிபாட்டி குடியரசு | பலாவு | பிஜி |
| மார்ஷல் தீவுகள் | வனாட்டு குடியரசு | மைக்ரோனீசியக் கூட்டு நாடுகள் |
| நவூரு குடியரசு | தொங்கா அரசு | துவாலு |
| பப்புவா நியூ கினியா | சமோவா | சாலமன் தீவுகள் |

## தேசிய ஊட்டச்சத்து ஆய்வு

- முதலாவது விரிவான தேசிய ஊட்டச்சத்துக் கணக்கெடுப்பானது 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலான காலகட்டத்தில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் மற்றும் யுனிசெஃப் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- இது ஊட்டச்சத்து குறைபாட்டை அளவிடுவதற்கும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொழுப்பு மற்றும் குழந்தைகள் & இளம் பருவத்தினரில் காணப்படும் சிறுநீரகச் செயல்பாடு போன்ற தொற்றா நோய்களின் விவரங்களைக் கணக்கிடுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வாகும்.
- 5-9 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் கிட்டத்தட்ட 10 சதவிகிதத்தினரும், 10-19 வயதுக்குட்பட்ட இளம் பருவத்தினரும் நீரிழிவு நோய்க்கு உள்ளாகக் கூடியவர்களாகவும் 5 சதவிகிதத்தினர் அதிக எடை கொண்டவர்களாகவும் 5 சதவிகிதத்தினர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## சிங்கப்பூர்-இந்தியா ஹேக்கத்தான்

- என்டியு சிங்கப்பூர், இந்தியாவின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி ஆணையம் (All India

Council for Technical Education - AICTE) ஆகியவை இணைந்து சிங்கப்பூர் - இந்தியா ஹேக்கத்தானின் இரண்டாவது பதிப்பை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளன.

- இது உடல் நலம், கல்வி மற்றும் தூய்மையான ஆற்றல் ஆகியவற்றின் நிகழ்நேர சவால்களுக்குத் தீர்வு காணும் ஒரு புத்தாக்கத் தீர்வுகள் மீதான ஒத்துழைப்பிற்காக இந்த இரு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 36 மணிநேரம் நடத்தப்படும் ஒரு போட்டியாகும்.
- 10,000 டாலர் மதிப்புள்ள முதல் பரிசானது 10வது அணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அணியில் இந்தியாவைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் சிங்கப்பூரைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் உள்ளனர்.
- ஒரு தொட்டியில் உள்ள தாவரத்தில் பொருத்தப்பட்டுள்ள உணர்விகளைக் கொண்ட தொகுப்பின் மூலம் காற்று மாசுபாடுகளைக் கண்காணிக்க அந்த மாணவர்கள் உருவாக்கிய புத்தாக்கத் தீர்விற்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- அதிக அளவிலான மாசுகளைக் கண்டறிந்தவுடன், தாவரத்தின் அடிப்பகுதியில் இருந்து சுத்தமான காற்றைப் பரப்புவதற்காக அதில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சிறிய விசிறியானது தானாகவே இயங்கத் தொடங்கும்.
- இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூரின் கல்வி அமைச்சர் ஒங் யே குங் பங்கேற்றார்.

# மாநிலச் செய்திகள்

## கிராமச் செயலகம் – ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திர மாநில அரசானது கிராமச் செயலகங்கள் என அழைக்கப்படும் புதிய நிர்வாகப் பிரிவை உருவாக்கியுள்ளது.
- கிராமம் மற்றும் வார்டு செயலகங்களில் ஏறத்தாழ 1.26 லட்சத்திற்கும் அதிகமானோர் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.
- 2019, அக்டோபர் 2 ஆம் தேதி முதல் மொத்தம் 11,158 கிராமச் செயலகங்களும் 3,786 வார்டு செயலகங்களும் செயல்பட்டு வருகின்றன.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை மேலும் அதிகரிப்பதற்காக நிர்வாகப் பரவலாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசாங்கத்தின் புதிய ஊழியர்கள் அரசாங்கச் சேவைகள் தடையின்றி செயல்படுவதை உறுதி செய்வார்கள். மேலும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பார்கள்.

## மோ சர்க்கார் - ஒடிசா அரசு

- காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஒடிசா மாநில முதலமைச்சரான நவீன் பட்நாயக், தனது அரசாங்கத்தின் புதிய நிர்வாக முயற்சியாக ‘மோ சர்க்கார்’ என்றத் திட்டத்தைத் தொடங்கினார்.
- பல்வேறு நோக்கங்களுக்காக அரசு அலுவலகங்களுக்கு வரும் மக்களுக்கு கண்ணியத்துடன் சேவைகளை வழங்குவதே ‘மோ சர்க்கார்’ என்ற திட்டத்தின் நோக்கமாகும்.
- சேவைகளைப் பெறுவதற்கு அரசு அலுவலகங்களுக்கு வரும் நபர்களின் தொலைபேசி எண்கள் தோராயமாக சேகரிக்கப்படும்.
- அரசாங்க அதிகாரிகளின் நடத்தை மற்றும் தொழில்முறை குறித்த கருத்துக்களைச்

சேகரிக்க அவர்கள் மீண்டும் தொலைபேசியின் மூலம் அழைக்கப்படுவார்கள்.

- பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ஊழியர்களின் நடத்தை நல்ல முறையில் உள்ளதா மோசமான நிலையில் உள்ளதா என்பது குறித்து அறிந்து, அதற்கேற்றாற் போல ஊழியர்கள் தரவரிசைப் படுத்தப்படுவார்கள்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## எம்.பி. பிர்லா விருது - விஞ்ஞானி தானு பத்மநாபன்

- இயற்பியலாளரும் அண்டவியல் நிபுணருமான தானு பத்மநாபனுக்கு அண்டவியல் உலகிற்கு அவர் செய்தப் பங்களிப்புகளுக்காக மதிப்புமிக்க 2019 ஆம் ஆண்டிற்கான எம்.பி பிர்லா நினைவு விருது வழங்கப்பட்டது.
- இவர் சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருதையும் அறிவியல் துறையில் பத்மஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார் (2007).
- இவர் கொல்கத்தாவில் உள்ள எம்.பி பிர்லா கோளரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதைப் பெற்றார்.
- இந்தக் கோளரங்கம் தற்போது தனது 54வது ஆண்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. 1965 ஆம் ஆண்டில் வானியல் விழிப்புணர்வுத் திட்டத்தைத் தொடங்கியதன் மூலம் இது வானியல் துறைக்கு முக்கியப் பங்காற்றுகிறது.

***இதுபற்றி***

- இந்த விருது 1993 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது விண்வெளி அறிவியல், வானியற்பியல், வானியல் மற்றும் அது தொடர்புடைய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் சிறப்பை அங்கீகரிக்கின்றது.
- விருது பெற்றவர்கள்: டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம், பேராசிரியர் ஜே.வி.நார்லிகர்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச முதியோர்கள் தினம் - அக்டோபர் 1

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1 ஆம் தேதியன்று சர்வதேச முதியோர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 1 ஆம் தேதியை சர்வதேச முதியோர்கள் தினமாக அறிவித்தது.
- முதியவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள், அதாவது முதிர்ச்சியின் காரணமாக மற்றும் முதியோர்களை துன்புறுத்துதல் போன்றவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- முதியவர்கள் இந்தச் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்புகளைப் பாராட்டுவதற்காகவும் இத்தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, “வயது சமத்துவத்திற்கான பயணம்” என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★